**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – தொழிற்கல்வி - தமிழ்நாட்டிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்குவது - சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளின் தீர்ப்பாணையை செயல்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்(விஇ)துறை**

**அரசாணை நிலை எண்.240** **நாள் 18.8.2010**

திருவள்ளுவராண்டு 2041

ஆவணி-2.

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.42, கல்வி, நாள் 10.1.69.
2. அரசாணை (நிலை) எண்.1023, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 9.12.93.
3. அரசாணை எண்.6, பள்ளிக் கல்வித் துறை, நாள் 4.1.2000
4. அரசாணை எண்.7, பள்ளிக் கல்வித் துறை, நாள் 4.1.2000
5. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப் பேராணை எண்கள்.6273 – 6276/2005-ன் மீது 2.12.2008 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பாணை.
6. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண்.24142/வி1/இ3/2008 நாள் 28.4.09, 27.7.09, மற்றும் 21.7.2010.

----

**ஆணை:-**

தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிகளில் 1978-ஆம் ஆண்டில் பொதுப்பிரிவு/தொழிற்கல்வி பிரிவு என இரு பிரிவுகளாக உருவாக்கப்பட்டது. தொழிற்கல்வி சார்ந்த மேல்நிலைப் பிரிவில் பகுதி நேர தொழிற் கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, பின்னர் முழுநேர தொழிற் கல்வி ஆசிரியர்களாக உட்படுத்தி முறையான ஊதிய விகிதங்களில் பணிபுரிந்து வருகின்றனர். மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தொழிற் கல்வி ஆசிரியர்களில் பலர் தங்களுடைய கல்வித் தகுதிகளை உயர்த்திக் கொண்டு அரசாணை எண்.42, கல்வித் துறை, நாள் 10.1.1969, மற்றும் அரசாணை எண்.1023, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 9.12.1993-ல் கண்டுள்ள அரசாணைகளின்படி ஏனைய ஆசிரியர்களுக்கு உயர்கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கப்படுவது போன்று, தங்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கக் கோரியுள்ளனர்.

2. மேலே 1 மற்றும் 2ல் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி ஏனைய ஆசிரியர்களுக்கு உயர்கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கப்படுவது போன்று ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கக்கோரி விண்ணப்பித்தும், மற்றும் இதுசார்ந்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து, தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு உயர்கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வுகளை அனுமதிக்க பல்வேறு வழக்குகளின் தீர்ப்பாணைகள் பெறப்பட்டுள்ளன என பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து, இத்தீர்ப்பாணைகள் மீது சட்டக்கருத்தினை பெற்ற பின்னர், மேற்படி தொழிற்கல்வி ஆசிரியர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள்/பணப்பயன் அளித்த நாளுக்கு பின்னர்

உயர்கல்வித் தகுதி பெற்றமையினை கருத்திற் கொண்டு ஊக்க ஊதிய உயர்வு அனுமதி அளிப்பது குறித்து அரசின் ஆணையினை வெளியிடுமாறு அவர் கோரியுள்ளார்.

3. சில தொழிற்கல்வி ஆசிரியர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப் பேராணை எண்கள்.6273 – 6276/2005-ன் மீது 2.12.2008 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பாணையில் கீழ்க்காணும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது:-

xxxx “the writ petitions are allowed with a direction to sanction eligible incentive increments to the petitioners for acquiring higher qualifications. Necessary orders shall be passed in favour of the petitioners within a period of six weeks from the date of receipt of a copy of this order”.

4. பள்ளிக் கல்வி இயக்குநர் மேலும் தனது அறிக்கையில், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் உயர்கல்வித் தகுதிகளுக்கு ஊக்க ஊதிய உயர்வினை ஆசிரியர்கள் பி.எட்., (B.Ed.) கல்வித் தகுதி பெற்ற பின்னர்தான் அளிக்கப்படுகிறது எனவும், இதனையே அடிப்படையாகக் கொண்டு தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு, உயர்கல்வித் தகுதிகளுக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்க பி.எட்., கல்வித் தகுதி பெற்றவர்களுக்குத்தான் வழங்க இயலும் என்பதனை வலியுறுத்த இயலாது எனவும், தொழிற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெறும் ஆசிரியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு பி.எட்., (B.Ed.) தகுதி வலியுறுத்தப்படுவதில்லை என்றும், இருப்பினும் அவ்வாசிரியர்களுக்கு உயர்கல்வித் தகுதிகளுக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படும்போது அவர்கள் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பிற்கு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பி.எட்., பயில அனுமதிக்கப்படும் பட்சத்தில் அவ்வாசிரியர்கள் பி.எட்.,/பி.டி., பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்று இருந்தால் மட்டுமே அவர்களின் உயர்கல்வித் தகுதிகளுக்கு ஊக்க ஊதிய உயர்வுகள் அனுமதிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார். அவ்வாறு பி.எட்.,/பி.டி., பயில அனுமதிக்கப்படாத பொறியியல் (Engineering) மற்றும் இதர இளங்கலை பட்டப்படிப்பு/பட்டயப்படிப்புகளுக்கு (UG Degree/UG Diplomo) இணையான முதுகலை பட்டயப்படிப்பு/முதுகலை பட்டப்படிப்பிற்கான (PG Degree/PG Diplomo) ஊக்க ஊதிய உயர்வுகள் அனுமதிக்க பி.எட்.,/பி.டி., பட்டப்படிப்பினை தேர்ச்சி பெறவேண்டும் என்பதிலிருந்து தளர்வு அளிக்கலாம் எனவும் மேலும், தொழிற்கல்வி ஆசிரியர்களை பொறுத்தமட்டில் பணிவரன்முறை செய்யப்படுவதற்கு முன்னரே முதுகலை பட்டப்படிப்பு/முதுகலை பட்டயப்படிப்பு (PG Degree/PG Diploma) முடித்து பி.எட்., கல்வித் தகுதியினை பெறவேண்டும் என தெரிவிக்கப்பட்டவர்கள் சார்ந்து பி.எட்., முடித்தவர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள்/பணப்பயன் அளித்த நாள் முதல் உயர்கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வு பெறவும், பி.எட்., கல்வித் தகுதியினை பெறவேண்டும் என்ற நிபந்தனையினை தளர்த்தப்பட்டவர்கள் சார்பாக அவ்வாசிரியர்கள் பணிவரன்முறை செய்யப்படுவதற்கு முன்னரே முதுகலை பட்டப்படிப்பு/பட்டயப்படிப்பு (PG Degree/PG Diplomo) முடித்தவர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள்/பணப்பயன் அளித்த நாள் முதல் உயர்கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் அனுமதி அளிப்பது குறித்தும், தொழிற்கல்வி ஆசிரியர் பதவிகளுக்கு மேலே 3 மற்றும் 4-ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் வகுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் மற்றும் அவற்றிற்கான உரிய உயர்கல்வித் தகுதிகளுக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் அனுமதிக்கலாம் எனவும் அரசின் ஆணையினையும் கோரியுள்ளார்.

5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. மேலே 1 மற்றும் 2ல் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி ஏனைய ஆசிரியர்களுக்கு

உயர்கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கப்படுவது போன்று மேல்நிலைக் கல்வியில் முறையான ஊதிய விகிதத்தில் பணிபுரியும் தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு இவ்வரசாணையின் இணைப்பில் உள்ளவாறு கலம் நான்கில் குறிப்பிடப்பட்டுள்ள உயர் கல்வித் தகுதிக்கு இரண்டு ஊதிய உயர்வுகளும், கலம் ஐந்தில் குறிப்பிடப்பட்டுள்ள உயர் கல்வித் தகுதிக்கு இரண்டு ஊதிய உயர்வுகளும், மொத்தத்தில் ஒரு ஆசிரியரின் பணிக்காலத்தில் நான்கு ஊதிய உயர்வுகளைப் பெற தகுதியுடையவர் என்ற அடிப்படையில் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கலாம் எனவும், இதனை இந்த ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து செயல்படுத்தலாம் எனவும் முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.337/JS(APA)/2010 நாள்.18.8.2010-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்

அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

பள்ளிக் கல்வி இயக்குநர்,
மற்றும் அனைத்து துறைத் தலைவர்கள்,
சென்னை. (இணைப்புடன்)
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், (இ)
(பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை- 1 / 5 / 35 / 108.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து கருவூலக் கணக்கு அலுவலர்கள்.
அரசு உயர்நீதிமன்ற சிறப்பு வழக்கறிஞர், (கல்வி)
சென்னை உயர்நீதி மன்றம், சென்னை – 104.

<u>நகல்</u>

நிதித் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
இணையதளம்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

அரசாணை(நிலை)எண்.240,     பள்ளிக் கல்வித்(விஇ)துறை, நாள் 18.08.2010-ன் இணைப்பு

மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர்கள் ஊக்க ஊதிய உயர்வு பெறுவதற்கான உரிய கல்வி தகுதிகள்

| Serial No | SUBJECT | BASIC QUALIFICATION | HIGHER QUALIFICATION PRESCRIBED | |
|---|---|---|---|---|
| | | | Ist Incentive ( Two Advance Increments ) | IInd Incentive ( Two Advance Increments ) |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **I Vocational Instructors for Home Science** | | | | |
| 1 | **Food Preservation** | a) B.Sc Home Science | M.Sc.Home Science (or) B.Ed | i) M.phil. (or) M.Ed (or) P.hd |
| | | ii Diploma in the relevant Vocational Subject (and) b)Practical experience for a period of one year in the relevant field | Post Graduate diploma in the relevant vocational subject | -- |
| 2 | **Baking and confectionery** | a) B.Sc Home Science | M.Sc.Home Science (or) B.Ed | i) M.phil. (or) M.Ed (or) P.hd |
| | | ii Diploma in the relevant Vocational Subject (and) b)Practical experience for a period of one year in the relevant field | Post Graduate diploma in the relevant vocational subject | -- |
| 3 | **Catering** | a) B.Sc Home Science | M.Sc.Home Science (or) B.Ed | i) M.phil. (or) M.Ed (or) P.hd |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ii Diploma in the relevant Vocational Subject (and)<br><br>b)Practical experience for a period of one year in the relevant field | Post Graduate diploma in the relevant vocational subject | -- |
| 4 | **Dietetics, Nutrition and food preparation`** | a) B.Sc Home Science | M.Sc.Home Science<br>(or)<br>B.Ed | i) M.phil.<br>(or)<br>M.Ed<br>(or)<br>P.hd |
| | | ii Diploma in the relevant Vocational Subject (and)<br><br>b)Practical experience for a period of one year in the relevant field | Post Graduate diploma in the relevant vocational subject | -- |
| 5 | **Interior Decoration** | a) B.Sc Home Science | M.Sc.Home Science<br>(or)<br>B.Ed | i) M.phil.<br>(or)<br>M.Ed<br>(or)<br>P.hd |
| | | ii Diploma in the relevant Vocational Subject (and)<br><br>b)Practical experience for a period of one year in the relevant field | Post Graduate diploma in the relevant vocational subject | -- |
| 6 | **Dress Designing and making** | a) B.Sc Home Science | M.Sc.Home Science<br>(or)<br>B.Ed | i) M.phil.<br>(or)<br>M.Ed<br>(or)<br>P.hd |
| | | ii Diploma in the relevant Vocational Subject (and)<br><br>b)Practical experience for a period of one year in the relevant field | Post Graduate diploma in the relevant vocational subject | -- |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | **Designing, Dyeing and printing** | a) B.Sc Home Science | M.Sc.Home Science (or) B.Ed | i) M.phil. (or) M.Ed (or) P.hd |
| | | ii Diploma in the relevant Vocational Subject (and) b)Practical experience for a period of one year in the relevant field | Post Graduate diploma in the relevant vocational subject | -- |
| 8 | **Textile and Designs** | a) B.Sc Home Science | M.Sc.Home Science (or) B.Ed | i) M.phil. (or) M.Ed (or) P.hd |
| | | ii Diploma in the relevant Vocational Subject (and) b)Practical experience for a period of one year in the relevant field | Post Graduate diploma in the relevant vocational subject | -- |
| 9 | **Child welfare and Nutrition** | a) B.Sc Home Science | M.Sc.Home Science (or) B.Ed | i) M.phil. (or) M.Ed (or) P.hd |
| | | ii Diploma in the relevant Vocational Subject (and) b)Practical experience for a period of one year in the relevant field | Post Graduate diploma in the relevant vocational subject | -- |
| **II Vocational Instructors for Commerce and Business** | | | | |
| 1 | **a) Office Secretaryship with Accountancy** | B.Com | M.Com (or) B.Ed | M.Phil (or) M.Ed (or) Ph.D |
| | **b) Office Secretaryship with Typewriting ( English / Tamil)** | i) Any Degree (and) ii) Typewriting Higher Grade in English / Tamil and T.T.C | P.G.Degree in the related subject (or) B.Ed | M.Phil (or) M.Ed (or) Ph.D |

| | | | | |
|---|---|---|---|---|
| | **c) Office Secretaryship with shorthand (English/ Tamil)** | i) Any Degree (and)<br><br>ii)100 words per minute in shorthand in English / Tamil , and<br><br>iii) T.T.C. in Shorthand | P.G.Degree in the related subject<br>(or)<br>B.Ed | M.Phil<br>(or)<br>M.Ed<br>(or)<br>Ph.D |
| 2 | **Insurance** | i) B.Com. with specialization in Insurance | M.Com<br>(or)<br>B.Ed | M.Phil<br>(or)<br>M.Ed<br>(or)<br>Ph.D |
| | | ii) Diploma in Insurance | Post Diploma in Insurance | -- |
| 3 | **Accountancy and Auditing** | B.Com with specialization in Accountancy and Auditing | M.Com<br>(or)<br>B.Ed | M.Phil<br>(or)<br>M.Ed<br>(or)<br>Ph.D |
| 4 | **Banking Assistance** | B.Com with specialization in Advanced Banking | M.Com<br>(or)<br>B.Ed | M.Phil<br>(or)<br>M.Ed<br>(or)<br>Ph.D |
| 5 | **International Trade** | B.Com with specialization in International Trade | M.Com<br>(or)<br>B.Ed | M.Phil<br>(or)<br>M.Ed<br>(or)<br>Ph.D |
| 6 | **Marketing and Salesmanship** | B.Com ( or ) Business Administration | M.Com<br>(or)<br>B.Ed | M.Phil<br>(or)<br>M.Ed<br>(or)<br>Ph.D |
| 7 | **Material Management** | B.Com ( or ) Business Administration and a Diploma in Material Management | M.Com<br>(or)<br>B.Ed | M.Phil<br>(or)<br>M.Ed<br>(or)<br>Ph.D |
| 8 | **Business Management from Small Scale Industries** | B.Com ( or ) Specialization in Business Administration and a Diploma in Material Management | M.Com<br>(or)<br>B.Ed | M.Phil<br>(or)<br>M.Ed<br>(or)<br>Ph.D |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | **Co-Operative management** | B.Com | M.Com (or) B.Ed | M.Phil (or) M.Ed (or) Ph.D |
| | | B.A. (Economics) | M.A Economics ( or ) B.Ed | |
| | | Degree of Equivalent standard with specialization in Rural Economics Co operation | P.G Degree in the Relevant Subject or B.Ed | |
| **III Vocational Instructor for Agriculture** | | | | |
| 1 | **Dairying** | B.Sc (Dairying) | M.SC (Dairying) | M.Phil (or) P.hd |
| | | B.V.Sc ( Degree) | M.V.Sc(Degree) | M.Phil (or) Ph.D |
| 2 | **Poultry** | B.V.Sc ( Degree) | M.V.Sc( Degree) | M.Phil (or) Ph.D |
| 3 | **Small Farm Management** | B.Sc (Agriculture) | M.Sc (Agriculture) | M.Phil (or) Ph.D |
| 4 | **Agro – Based Industries** | B.Sc (Agriculture) | M.Sc (Agriculture) | M.Phil (or) Ph.D |
| 5 | **Farm Mechanic and post Harvest Technology** | Diploma in Agriculture with one year practical | PG Diploma in agriculture(or) B.Sc (Agri) | M.Sc (Agri) |
| 6 | **Rural Construction Technology and Soil Conservation** | B.Sc (Agriculture) | M.Sc (Agri) | M.Phil (or) Ph.D |
| 7 | **Sericulture and Agriculture** | B.Sc (Agriculture) | M.Sc (Agri) | M.Phil (or) M.Ed (or) Ph.D |
| | | B.Sc Zoology | M.Sc Zoology (or) B.Ed | |
| | | B.Sc. Botany | M.Sc Botany (or) B.Ed | |
| 8 | **Plant Protection (Pests, Diseases and seeds )** | B.Sc (Agriculture) | M.Sc (Agri) | M.Phil (or) Ph.D |
| 9 | **Vegetable and Fruits** | B.Sc. (Horticulture) | M.Sc Horticulture | M.Phil (or) Ph.D |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | **Floriculture and medicinal Plants** | B.Sc (Horticulture) | M.Sc Horticulture | M.Phil (or) Ph.D |
| 11 | **Agriculture Chemicals** | B.Sc (Agriculture) | M.Sc (Agriculture) | M.Phil (or) Ph.D |
| 12 | **Crop Production** | B.Sc (Agriculture) | M.Sc (Agriculture) | M.Phil (or) Ph.D |
| 13 | **Spices and Plantation crops** | B.Sc. (Horticulture)<br><br>(or) related Degree | M.Sc (Horticulture) | M.Phil (or) Ph.D |
| 14 | **Fisheries** | B.Sc. (Marine Biology) | M.Sc.(Marine Biology) | M.Phil (or) Ph.D |
| | | B.Sc Fisheries Science | M.Sc Fisheries | |
| | **IV Vocational Instructor for Engineering and Technology** | | | |
| 1 | **Building Maintenance** | DCE and One year Practical | P.G. Diploma in Civil Engineering (or) BE (Civil) | M.E.(Civil) |
| 2 | **a) Electrical Domestic Appliances Repairs and maintenance** | DEE and one year practical | P.G. Diploma in (EE) (or) BE ( EEE) | M.E (EEE) |
| | **b)Maintenance and servicing of Electrical machines including Generators** | DEE and one year practical | P.G. Diploma in EE (or) BE ( EEE) | M.E (EEE) |
| 3 | **Electronic Equipments Projector Equipment servicing and maintenance** | Diploma in Electronics /Radio / Telecommunication and one year practical experience | P.G. Diploma in Electronics / Radio / Telecommunication (or) B.E (ECE) | ME(ECE) |
| 4 | **Radio and T.V ( Maintenance and Repairs)** | DECE or DEE or DEEE with Post Graduate Diploma in T.V<br><br>(or)<br><br>Diploma in T.V Engineering | P.G. Diploma in ECE or EEE (or) B.E (ECE) (or)<br><br>BE(EEE) | M.E (ECE) (or)<br><br>M.E.(EEE) |
| 5 | **General Machinist** | D.M.E. with one year practical Experience | P.G. Diploma in Mechanical Engineering (or) BE ( Mechanical Engineering ) | ME |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | **Electrical Motor Rewinding** | D.E.E with one year Practical Experience | P.G. Diploma in EE (or) BE (EEE) | ME (EEE) |
| 7 | **Textile Technology** | Degree in Textile Technology (or) D.T.T with one year Practical | P.G. Degree in Textile Technology (or) P.G. Diploma in TT | -- |
| 8 | **Leather Technology** | Degree in Leather Technology (or) D.L.T. with one year Practical Experience | P.G. Diploma in Leather Technology | -- |
| 9 | **Maintenance and Servicing of Textile machinery** | D.T.T (or) DME (or) DEE with one year Practical Experience | B.E (TT) (or) B.E (Mechanical Engineering ) | ME (TT) (or) ME(Mechanical Engineering ) |
| 10 | **Business machines and Computer Programming** | B.E. Degree in Electrical / Electronics Engineering (or) B.E. Degree in Electronics and Communications. Engineering Degree (or) Post graduate Diploma in Data Processing | M.E. (EEE) (or) M.E (ECE) | M.Phil ( or ) P.hD |
| 11 | **Printing Technology (Litho)** | DPT with specialization in Litho and one year practical experience | P.G.Diploma in DPT with specialisation in Litho | -- |
| 12 | **Auto Mechanic** | DME and one year Practical experience | B.E. (ME) | ME(Mechanical Engineering) |
| **V Vocational Instructor for Health** | | | | |
| 1 | **Medical Lab Assistant** | B.Sc ( Bio-Chemistry) | M.Sc (Bio Chemistry) (or) B.Ed | M.Phil (or) M.Ed (or) P.hd |
| 2 | **E.E.G /E.C.G/ Audio Metry Technician** | B.Sc (or) a Degree or equivalent standard with Diploma in Auto metry Technician with one year practical | M.Sc (or) B.Ed (or) P.G. Diploma in Auto metry Technician | M.Phil (or) M.Ed (or) P.hd |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | **Opthalmic Technician** | B.Sc with specialization optometric (or) Diploma in ophthalmic and one year practical experience | M.Sc with specialisation in Optometrics (or) P.G. Diploma in Opthalmic | M.Phil (or) P.hd |
| 4 | **Dental mechanic** | Diploma in Dental equipment Technology and one year practical experience | P.G. Diploma in Dental equipment Technology | -- |
| 5 | **Dental Hygienists** | B.D.S | M.D.S | M.Phil (or) P.hd |
| 6 | **Radiological Assistant** | B.Sc with specialisation in Radiology | M.Sc with specialisation in Radiology | M.Phil (or) P.hd |
| | | Diploma in medical Radiology and one year practical | P.G.Diploma in medical Radiology | - |
| 7 | **Nursing** | B.Sc(Nursing) | M.Sc (Nursing) | M.Phil (or) Ph.D |
| 8 | **Hospital House Keeping** | A degree in Science with Diploma in Hospital House keeping management | Relevant P.G. Degree (or) B.Ed | M.Ed (or) M.Phil (or) Ph.D |
| | **VI Vocational Instructor for Photography and music** | | | |
| 1 | Photography | Diploma in cinematography with one year practical | P.G Diploma in cinematography | -- |
| 2 | Music | Music Degree, ( or ) Diploma in music, (or) Sangeetha Sironmani Title of Madras University (or) Sangeetha Vidwan Title of Tamil Nadu music college (or) Sangeetha Bhushanam of Annamalai University with one year practical | Master Degree in related subject ( or ) B.Ed | M.Phil (or) M.Ed (or) Ph.D |

## VII VOCATIONAL INSTRUCTORS FOR COMPUTER SCIENCE

| Serial No | SUBJECT | BASIC QUALIFICATION | HIGHER QUALIFICATION PRESCRIBED | |
|---|---|---|---|---|
| | | | I st Incentive Two Advance Increments | II nd Incentive Two Advance Increments |
| | **Computer Science** | **1)** BE Degree in<br>Computer Science **(or)**<br>Electronics and Communication **(or)**<br>Electrical and Electronics Engineering. | M.E (or)<br>Related P.G. Degree | M.Phil<br>( or )<br>M.Ed<br>( or )<br>P.hD |
| | | **2)** B.Sc Computer Science **(or)**<br>One year PG DCA<br>**3)** Any Degree from a recognised University in the state (or) a degree of equivalent standard with.<br>**i)** One year post graduate Diploma course in Computer Application ( recognized University)<br>**ii)** Diploma Course in system Analysis and Data Processing offered by Annamalai University (or) equivalent<br>**iii)** Certificate on O Level Examination conducted by department of Electronics (or) equivalent (or)<br>iv) Certificate Course in Computer Programming conducted by recognized colleges and Universities for a period not less than six months or equivalent | P.G. Degree in related Computer Science subject from a recognised University in the State or equivalent | M.Phil<br>( or )<br>M.Ed<br>( or )<br>P.hD |
| | | M.Sc ( IT)<br>M.Sc (Computer Science)<br>M.Sc (Software Technology)<br>M.Sc. ( Computer Communication)<br>M.CA<br>B.CA and one year post graduate Diploma Course in Computer Application. | M.Phil Degree in related Computer Science subject from a recognized University in the State or equivalent | P.hD |

M. Kutralingam,
Principal Secretary to Government.

//True copy//

Section officer.